**செய்தி வெளியீடு எண்: 625** **நாள் : 11.12.2014**

# செய்தி வெளியீடு

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் டிசம்பர் 2014 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 13.12.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | மியாசி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி. 113, அங்கப்பன் தெரு, மண்ணடி சென்னை 600 001 (மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின்புறம்) |
| 2 | இராயபுரம் | CSI ராஜகோபால் மேல்நிலைப்பள்ளி, ஜி. எம் . பேட்டை, இராயபுரம், சென்னை 600 013. ( கல்மண்டபம் காவல் நிலையம் பின்புறம் , CSI சர்ச் அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, கோபாலபுரம் , திரு. வி. க. நகர், சென்னை 600 082. ( திரு. வி. க. நகர் பஸ் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சூளைமேடு நெடுஞ்சாலை, சென்னை 600 094. (சமுதாயநலக்கூடம் எதிரில்) |
| 5 | அம்பத்தூர் | அம்பத்துார் நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சாவடி தெரு , கொரட்டூர், சென்னை 600 080 (சாந்தி திரையரங்கம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், சாந்தி காலணி, அண்ணா நகர் மேற்கு ,சென்னை 600 040 (சுந்தரம் பவுண்டேசன் மருத்துவமனை அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | ஜெயகோபால் கரோடியா மேல்நிலைப்பள்ளி, திருவொற்றியூர், சென்னை 600 019. (அஜாக்ஸ் பஸ் டிப்போ அருகில்) |
| 8 | ஆவடி | அண்ணா சமுதாயக்கூடம், மேல்பாக்கம், வெள்ளச்சேரி, கதவூர், சென்னை . 55 வேல்டெக் பொறியியல் கல்லூரி அருகில்) |
| 9 | தி.நகர் | அரசு மேல்நிலைப்பள்ளி, மேற்கு மாம்பலம் , (புதுார் ) 3 வது அவன்யூ , அசோக்நகர் , சென்னை 83. (அசோக்நகர் காவல் நிலையம் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | புனித ரபேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, 18/2 , கச்சேரிசாலை, மயிலாப்பூர் , சென்னை 600 004. (சாந்தோம் சர்ச் அருகில்) |
| 11 | பரங்கிமலை | ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகர திருமண மண்டபம், பாலகிருஷ்ணாபுரம் பிரதான சாலை, ஆதம்பாக்கம், சென்னை 88 ( என். ஜி.ஓ, காலனி பேருந்து நிலையம் அருகில் ) |
| 12 | தாம்பரம் | லிடியா மெட்ரிகுலேசன் பள்ளி , கஸ்பாபுரம், அகரம் தென்,சென்னை 126. |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 112 கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சைதாப்பேட்டை, சென்னை 15. (கடும்பாடி சின்னம்மன் கோயில் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | அரசு மேல்நிலைப்பள்ளி, நந்தனம் விரிவு, 5 வது மெயின் ரோடு, நந்தனம் , சென்னை 35 . (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நந்தனம் கிடங்கு எதிரில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாய கல்லூரி, அருணாச்சலம் தெரு, சேப்பாக்கம் , சென்னை 5. (ஆதம் மார்க்கெட் எதிரில்) |
| 16 | சோழங்கநல்லூார் | சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் அலுவலகம், (195 வது வார்டு) கண்ணகி நகர், சென்னை –600 096. (கண்ணகி நகர் நுழைவு வாயில் அருகில்) |

ஆணையாளர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**